www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 025
17 யூலை 2010
தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# பிரியாணி புத்திஜீவி கிருஸ்ணா அம்பலவாணர்

ஊடகவியலாளர், எழுத்தாளர், கவிஞர், கலைஞர் என்று தனக்குத் தானே பட்டம்சூட்டிக் கொள்ளும் சுவிற்சர்லாந்தில் உள்ள கிருஸ்ணா அம்பலவாணர், தேசத்துரோகி கே.பியு டன் நாளொன்றுக்கு குறைந்தது இரண்டு தடவைகள் தொலைபேசியில் உரையாடி வருவதாக, கறுப்பின் புல னாய்வு வட்டாரங்கள் உறுதி செய் துள்ளன.

உணவகம் ஒன்றில் பிரியாணி தயாரிப்பாளராகப் பணிபுரியும் கிருஸ்ணா அம்பலவாணர், தேசத் துரோகி கே.பியை அடுத்த தேசியத் தலைவராகவும், நரிகேசி உருத்திரகுமா ரனை அக்கினிக்குஞ்சாகவும் வர்ணி த்து அடிக்கடி தனது இணையத் தளமான இன்போதமிழ் தளத்தில் கட்டுரைகளை வெளியிட்டு வருகின் றார். தேவாரம், திருவாசகம் போன்ற வற்றில் காணப்படும் சொற்களையும், ஏனைய எழுத்தாளர்களின் சொல்லா டல்களை பொறுக்கித் திருடி தனக்குத் தானே ஊடகவியலாளர் என்ற பட் டத்தை கிருஸ்ணா அம்பலவாணர் சூட்டியுள்ளார்.

மே 18இற்குப் பின்னர் சிங்க ளத்தின் கைக்கூலியாக மாறிய கோணல் ராமுடன் அடிக்கடி தொலை பேசியில் தொடர்பு கொண்டு, வெளி நாடுகளில் புலம்பெயர்வாழ் தமிழீழ மக்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் தொடர்பான உளவுத் தகவல்களை பிரியாணி கிருஸ்ணா வழங்கி வந்திருந்தார். தற்பொழுது கே.பியுடன் தொலைபேசியில் உரையாடி வரும் பிரி யாணி கிருஸ்ணா, சுவிசில் உள்ள தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களை யும், வணிகர்களையும் கோத்தபாய — கே.பி குழுவிடம் காட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது அம்பலமாகியுள்ளது.




**“கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு”**

www.tamilarangam.net



# பெருங்குடிமகன் சர்வேயின் கனவுலகத் திரைப்படம்

மதுவுக்கு அடிமையாகியுள்ள பெருங்குடிமகன் சர்வே, தாய்மண் என்ற பெயரில் திரைப்படம் ஒன்றை தயாரிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாக, கறுப்பிற்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

முன்னர் ரி.ரி.என் தொலைக்காட்சியின் இந்திய கலையகத்தின் இணைப்பாளராக விளங்கிய மாறன் என்றழைக்கப்படும் ஈசனின் உதவியுடன் இதற்கான முயற்சியில் பெருங்குடிமகன் சர்வே ஈடுபடுவதாக தெரிய வருகின்றது. இந்த முயற்சிக்கு ஐ.பி.சியில் முன்னர் ஆய்வு நிகழ்ச்சிகளை வழங்கிய ரூபன் சிவராஜா, தமிழக இயக்குனர் தங்கர்பச்சானும் உள்ளனர்.

அண்மையில் ஒஸ்லோவில் உள்ள விமான நிலையம் ஒன்றின் தேனீரகத்தில் பெருங்குடிமகன் சர்வே, தங்கர்பச்சான், மாறன் என்றழைக் கப்படும் ஈசன், ரூபன் சிவராஜா ஆகியோர் கோப்பி குடித்த பொழுது பதிவு செய்யப்பட்ட நிழற்படங்கள் கறுப்புக்கு கிடைத்துள்ளன. இத்திரைப்படத்துக்கான நிதிகளை சிறீலங்காவில் இருக்கும் சூழ்நிலைக்கைதியான கே.பி வழங்குவதற்கு ஒத்துக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் பிரான்சுக்கும் நோர்வேக்கும் சென்று திரும்பிய தங்கர்பச்சான், இந்திய அரசின் உளவுத்துறையான றோவின் முக்கிய அங்கம் என்பது யாவரும் அறிந்த விடயம். தங்கர்பச்சானை அண்மையில் இந்தியாவில் வைத்து கே.பி சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பிரான்சுக்கு சென்ற தங்கர்பச்சான் அங்கும் தனது றோ நண்பர்களை சந்தித்ததாகவும் தெரியவருகின்றது. இப்படத்துக்காக முள்ளிவாய்க்கால் இறுதிச்சம்பவத்தை கதையாக்க துடிக்கும் கே.பிக்கு தங்கர்பச்சான் செயல் வடிவம் கொடுக்கப்போகின்றார். வரலாற்றை திரித்து எடுக்கப்படவிருக்கும் இப்படத்தின் மூலம் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் குழப்ப நிலையை தோற்றுவிக்க முயல்கின்றனர்.

புலம்பெயர் தமிழர்களிடம் தமது திட்டத்துக்கு ஆதரவையும் ஒத்துழைப்பையும் விரைவில் கேட்பார்கள். எனவே மக்கள் இதையிட்டு விழிப்பாக இருக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.







# கொழும்புப் பயணத்திற்கு இலவச ரிக்கெட் அனுசரணை லூக்காஸ் அம்மான்!

கொழும்பு சென்று கே.பியை சந்திப்பதற்கு இலவச விமான ரிக்கெட்டுக்களை லூக்காஸ் அம்மான் ஏற்பாடு செய்து கொடுத்து வருகின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆரம்பகால உறுப்பினரான லூக்காஸ் அம்மான், கே.பியின் நெருங்கிய நண்பராவார். மலேசியாவில் கே.பியின் கடத்தல் நாடகம் நடைபெற்ற பொழுது அங்கு கே.பியிற்கு அருகில் லூக்காஸ் அம்மானும் தங்கியிருந்தார். தற்பொழுது கே.பியை சந்திக்க விரும்புவோருக்கு இலவச விமான ரிக்கெட்டுக்களை லூக்காஸ் அம்மான் வழங்கி வருவதாக தெரியவருகின்றது.

லூக்காஸ் அம்மானின் இந்தத் துரோகச்செயல், அவரது உடன்பிறப்பான தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் – மாவீரன் பா.நடேசன் அவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகம் என்பதை கறுப்பு சுட்டிக் காட்ட விரும்புகின்றது.

